# முகவுரை

பற்பல யுக யுகாந்தரங்களாக மனித சமுதாயத்தை உய்விக்க, உலக மக்கள் தெய்வீக நிலையில் உயர்ந்திட, மிகமிக அற்புதமான தெய்வீக மனிதர்கள் நம்மிடையே தோன்றியிருக்கிறார்கள். இயேசுநாதர் இப்படிப்பட்ட ஒரு அரிய மனிதர். அதுபோலவே சாக்கியமுனி, புத்தரும், முகமது நபியும் விளங்கினார்கள். நாம் இந்த :மூவரைப் பற்றி நன்றாக அறிவோம். ஆனால் இதுபோல பற்பலர் உண்டு. அவர்களது பெயர்களைக் கூட நாம் அறிய மாட்டோம். ஒருசிலர் வெளிப்படையாகவே போதித்தார்கள். ஒருசிலருக்கு தெரிந்து இருந்தது. னால் பலர் விளம்பரங்களற்று தனித்த நிலையில் இருந்தார்கள். இவர்கள் பல தேசங்களில், பல நேரங்களில், பல பெயர்களோடு விளங்கினார்கள். மாஸ்டர், அவதார புருஷர், உள் ஒளி பெற்ற மகான், நம்மை உய்விப்பவர், இறைவனால் அனுப்பப்பட்டவர், தெய்வத்தாய், இறைவனின் தூதுவர், சத்குரு நாதர், நடமாடும் தவமுனிவர் என்பது போன்ற பல. அவர்கள் நமக்கு அளித்தவைகளை, அருட்குவியல், உள் ஒளிப்பிரகாசம், மோட்சம், உண்மை அறிவு, ஆன்ம அனுபூதி என்று பலவாறாக குறிப்பிடுகிறோம். இந்த பெயர்கள் வேறுபடலாம். ஆனால் இவை அனைத்துமே ஒன்றையே குறிப்பிடுகின்றன. இறைவனால் அனுப்பி வைக்கப்பட்ட இவர்கள் அனைவருமே இறைவுலகில் இருந்து வந்தவர்கள். தெய்வீக நிலையில் உயர்ந்தவர்கள், புனிதமானவர்கள், உலக மக்களது நிலையை உயர்த்தும் திறன் கொண்டவர்கள். பண்டைய காலத்து புனிதத்துடன் இன்றும் நம்மிடையே வாழ்கிறார்கள். இருந்தபோதும் இந்த உண்மை ஒருசிலருக்கே தெரிந்து இருக்கிறது. இப்படிப்பட்ட ஒருவர்தான் இந்த ஆன்மீக உலகில் மிக உயர்ந்து பரமசத்குருவாக நம்மிடையே வாழ்ந்துவரும் சுப்ரீம் மாஸ்டர் சிங்ஹாய் அவர்கள். இவர் மிகவும் பரவலாக, பலராலும் உணரப்பட்டு, நடமாடும் தவமுனிவராக விளங்குவது வியப்பாக இருக்கலாம். ஏனென்றால் இவர் ஒரு பெண்மணி.

புத்த மதத்தைச் சார்ந்தவர்களும் மற்றும் பலரும் ஒரு பெண்மணி புத்தராகும் நிலைக்கு உயர முடியாது என்ற தவறான கொள்கையை உடையவராக இருக்கிறார்கள்.

மேலும் இவர் ஒரு ஆசியர். மேலைநாடுகளில் வசிக்கும் பல மக்கள், தங்களைக் காப்பாற்றவரும் புனிதமான நபர் அவர்களைப் போன்றே மேலைநாட்டவராக இருக்க வேண்டும் என்ற கருத்தை உடையவர்களாக இருக்கிறார்கள். இருந்தபோதும் பல நாடுகளைச் சேர்ந்த பலதரப்பட்ட மதக்கொள்கைகளை உடைய நாங்கள் இந்த புனிதமான நபரைப் பற்றி நன்றாகப் புரிந்து கொண்டு இருக்கிறோம், அவரது போதனைகளை கடைப்பிடிக்கிறோம். அவர் யார், அவர் எப்படிப்பட்டவர் என்பதை நன்றாக உணர்ந்து கொண்டவர்களாக இருக்கிறோம். நீங்கள் இதைத் தெரிந்துகொள்வதற்கு, நிர்மலமான மனது, இதயப் பூர்வமான உண்மை உணர்வு இவைகளை உடையவராக இருக்க வேண்டும். உங்கள் பொன்னான நேரமும், சிதறாத கவனமும் தேவை அவ்வளவே!

மக்கள் தமது வாழ்வின் பெரும்பான்மையான நேரத்தை வாழ்க்கையை நடத்துவதற்கும் உலகில் நமக்குத் தேவையான பொருட்களை சேகரிப்பதிலுமே செலவிடுகின்றோம். நாம் நம்மையும் நம்மை சேர்ந்தவர்களையும் நல்ல நிலையில் வைப்பதற்கு உழைக்கத் தயாராக இருக்கின்றோம். நமக்கு சிறிது நேரம் கிடைத்தால் அவற்றை அரசியல், விளையாட்டு, தொலைக்காட்சிப்பெட்டி போன்றவற்றிலோ அல்லது ஏதாவது முறைகேடுகள் நடந்திருக்குமானால் அவற்றைப் பற்றி விவாதிப்பதிலொ செலவழிக்கிறோம். இறைவனின் அற்புத இறையனுபூதி ரசத்தை ருசிகண்ட நம்மிடையே விளங்கும் மக்களுக்கு வாழ்க்கை என்பது உலகாயதம் மட்டுமல்ல என்பது நன்றாக விளங்கும்.

இந்த நல்ல விஷயம் பலருக்கு எட்டவில்லையே என்பதுதான் எங்கள் ஆதங்கம். வாழ்வில் நாம் காணும் பலவிதமான விசித்திரங்களுக்கும், கடினமான சூழ்நிலைகளுக்கும், கேள்விகளுக்கும் ஒருவிடை அல்லது

விடுதலை நமக்குள்ளேயே காத்திருக்கிறது என்பதே பேருண்மை. இந்த இறைநிலை ஒரு மூச்சுக்காற்று தூரத்தில்தான் உள்ளது. என்பது எங்களுக்கு நன்றாகத் தெரியும். மன்னிக்கவும். எங்களது அதிக உற்சாகத்தினால் உங்களது விஞ்ஞான மனதை நாங்கள் புண்படுத்த விரும்பவில்லை. இருந்தபோதும் நாங்கள் கண்டு ருசித்த இறை யனுபூதிகளுக்கு உங்களையும் அழைத்துச் செல்ல விரும்பும் ஒரு அவாவினால் நாங்கள் இதை கூறத் துணிந்தோம்.

பரமசத்குரு சிங்ஹாய் அவர்களின் சீடர்களாகவும், குவான்-யின் தியானமுறையினை கடைப்பிடிக்கும் சீடர்களாகவும் விளங்கும் நாங்கள் இந்த முகவுரை புத்தகத்தை உங்களுக்கு அன்புடன் அளிக்கின்றோம். இது உங்களை தெய்வீக அனுபூதி நிலைக்கு அருகில் அழைத்துச் செல்லும் திறன் படைத்தது. இது எங்கள் பரமசத்குரு அவரிடமிருந்தோ, மற்ற எவரிடம் இருந்தோ உங்களுக்கு வந்து சேரலாம். பரமசத்குரு சிங்ஹாய் அவர்கள் தியானம், உள்மன ஆய்வு, இறைவனிடம் பிரார்த்தனை ஆகியவைகளின் முக்கியத்துவத்தை நமக்கு போதிக்கின்றார். அவர் நமக்குள் விளங்கும் தெய்வீக நிலையை உணரச் செய்கிறார். எவர் ஒருவர் சமூகத்தில் இருந்து விலகி இந்த இறைநிலையை அடைய முயற்சி செய்கிறார்களோ அவர்களே உள்ஒளி நிறைந்தவர்களாகி அந்த பரம்பொருளின் மெய்ஞானத் துளிகளில் கலக்க இயலுவார்கள். இது எட்டமுடியாததோ அல்லது மனிதமுயற்சிக்கு அப்பாற்பட்டதோ அல்ல. அவரது வேலை என்னவென்றால், நாம் சாதாரணமான வாழ்க்கை வாழும்போதே நமது உள்ளே விளங்கும் இறைவனின் நிலையை தட்டி எழுப்புவதே ஆகும். அவர் கூறுவதுபோல, “இது இப்படித்தான்”. நம் அனைவருக்கும் உண்மை நிலை என்ன என்பது தெரியும். ஆனால் நாம் நமது உண்மை நிலையை மறந்துவிட்டோம். எனவே, சில நேரங்களில் சிலர் வந்து நம்மைத் தட்டி எழுப்பி நமது வாழ்க்கையின் அடிப்படை குறிக்கோளைப் பற்றி எடுத்துக்கூற வேண்டியிருக்கிறது. நாம் ஏன் உண்மை நிலை பற்றி அறிந்திட முயற்சிகள் செய்யவேண்டும்? நாம் ஏன் இறைவனிடத்தில் அல்லது புத்தரிடத்தில் அல்லது நாம் மிக உயர்ந்த

சக்தி எது என்று நினைக்கிறோமோ அந்த உயர்ந்த இறையுணர்வைப் பற்றி ஏன் நினைக்கவேண்டும் என்ப வைகளைப் பற்றி மிகவும் தெள்ளத் தெளிவாக கூறுகின்றார். அவர் தன்னை பின்பற்றுமாறு ஒருவரையும் அழைப்பதில்லை. அவர் தனது ஒளி உலக அனுபவங்களை உங்களுக்கு முன்வைத்திட பலர் இதன்மூலம் பெரும் மோட்சநிலை அடைந்திட வழிபிறக்கும் என்பதே உண்மை நிலையாகும். இந்த சிறுபுத்தகம் பரமசத்குரு சிங்ஹாய் அவர்களின் அறிவுரைகளுக்கு முகவுரைதான். இதிலுள்ள உயர்ந்த சிந்தனைகள், சொற்பொழிவுகள், பழமொழிகள் யாவுமே பரமசத்குரு சிங்ஹாய் அவர்களால் கூறப்பட்டவைகள். அவைகள் பதிவு செய்யப்பட்டும், சரிபார்க்கப்பட்டும், சில சமயம் மொழிபெயர்க்கப்பட்டும், புத்தக அளவில் கொண்டுவர சீரமைக்கப்பட்டும் இருக்கின்றன. எனவே நீங்கள் பரமசத்குரு சிங்ஹாய் அவர்களின் ஆடியோ அல்லது வீடியோ ஒலி, ஒளி நாடாக்களை கேட்கும்படியும், பார்க்கும்படியும் கேட்டுக் கொள்கிறோம். நீங்கள் இவற்றின் மூலம் பெரும்பலனையும், நேரடி உணர்வுகளை அடைந்தவர்களாகவும் இருக்கமுடியும். நீங்கள் அவரை நேரடியாக பார்க்க முடிந்தால் அதுவே உங்கள் பூரணத்துவ அனுபவமாக இருக்கும்.

ஒரு சிலருக்கு பரமசத்குரு சிங்ஹாய் அவர்கள் ஒரு தாய். மற்றும் சிலருக்கு அவர் ஒரு தந்தை. சிலருக்கு அவர் உயிரினும் இனியவர். என்னவாக இருந்தாலும் அவர் உங்களின் சிறந்த வாழ்நாள் நண்பராக விளங்குவார். அவர் நமக்கு அருளை வாரி வழங்க வந்திருப்பவர். நம்மிடம் எதையும் எதிர்பாராதவர். அவரது அறிவுரைகளுக்கு, உதவிகளுக்கு, தீட்சைகளுக்கு எந்தவிதமான ஒரு பிரதியுபகாரத்தையும் எதிர்பார்ப்பதில்லை. அவர் உங்களது துன்பங்களையும் வேதனைகளையும் துயரங்களையும் மட்டுமே ஏற்றுக் கொள்கிறார். ஆனால் நீங்கள் இதை விரும் பினால் மட்டுமே!